# பூச்செண்டு



30 காசு

செப்டம்பர்
1968

கருத்த முடிபுரளக் களகத்தைக் கருக் கொண்டு
வறுத்த ஒளிமுகத்தில் வாட்டமுறச் சீர் பார்த்து
நிறுத்த விழியிரண்டில் நீர்வழிய நின்துயரம்
குறித்த போதுன் யாரோ? கூ [illegible]

www.thamizham.net - Free E Books No TM 14710

(சென்ற இதழ் தொடர்ச்சி :)

நூலகத்திற்குச் சென்றேன். என்னைப் பார்த்தவுடன் அவன் புன்முறுவல் செய்தான். அந்த முறுவலில், என் இதய பூமியில் கோடை மழை பெய்ததுபோல ஓர் உணர்ச்சி! இருவரும் ஒரு பெஞ்சிலே அமர்ந்தோம். அமைதியான நூலகத்தில் அந்த விநாடி, நான்தான் அமைதியை உடைத்தேன்.

"குமார் உன்னிடம் பேச வேண்டும் என்று நான் பல நாட்களாக முயற்சிக்கிறேன். நீ என்னைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறாய் என்று நினைக்கிறேன்" என்றேன்.

உன்னளவில் அபாண்டமாகத்தான் இருக்கும். தவறு கட்டாயமாக உன்னுடையதாக இருக்கும் விதத்தில், நான் எனது எந்த நிலையையும் வெளிப்படையாகச் சொல்வதோ அல்லது நீ கோபப்படுவதோ தேவையற்றவை"

அவன் பேச்சு அவன் செய்தது முற்றிலும் சரியே என்ற உணர்வை ஏற்படுத்த வல்லதாய் விளங்கியது. அது சரியோ தவறோ என்ற பிரச்சனையை மீண்டும் கிளறாமல் நான் பேச்சைத் திருப்பினேன்.

"குமார் நீ தயவு செய்து இந்த மாதிரி தத்துவ ரீதியாகவோ,

# நட்பிற்காக......

"எழில்வளவன்"

"இல்லை. நான் யாரையும் எப்போதும் தவறாகப் புரிந்து கொண்டதே கிடையாது. சில நாட்களாக என்னிடம் எப்போதும் போல நீ பேசுவதில்லை. எனவே நான் பேச வாய்ப்புக்கள் இல்லை".

"குமார் அப்படியில்லை. அன்று உனது வறுமை நிலையை நீ வெளிப்படையாகச் சொல்லியிருந்தால் நானே அறுபது ரூபாய் மகிழ்ச்சியாகக் கொடுத்திருப்பேன். அதற்கு மாறாக நீ என்மேல் அபாண்டம் செலுத்தியதால் தான் நான் கோபமுற்றேன். பரவாயில்லை. நடந்ததை மறப்போம். இனியாவது தயவு செய்து என்னிடம் வெளிப்படையாகப் பேசு குமார்"..

"நான் உன்மேல் அபாண்டம் செலுத்துவதாக நினைத்தால் அது

தொடர்பற்ற விதமாகவோ பேசாதே! நாம் இருவரும் நண்பர்கள். முற்றிலும் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதிலும் வளைந்து கொடுப்பதிலும் தான் நமது நட்பு வளர முடியும்!"

"யார் இல்லையென்றது. வளைந்து கொடுக்க வேண்டியவர் வளைந்து கொடுக்காதபோது நட்பு வளரும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்."

அவன் பேச்சு எனக்கு மிகவும் ஏமாற்றமாக இருந்தது. நான் அவனை நெருங்க நெருங்க அவன் என்னிடமிருந்து விலகிக் கொண்டே போவது எனக்கு உள்ளத்தை வேதனைப் படுத்தியது. எனக்கு அவனளவு பேச்சுத் திறனில்லை! அவனைப் பேச்சில் மடக்குமளவுக்கு என்னால்



www.thamizham.net - Free E Books No TM 14710

வாதிட்டு அவனுக்கு எதிராக எனது கருத்தை நிலைநாட்ட முடியவில்லையே! அன்பு செலுத்தப்படும் நபர்மீது அன்பு செலுத்துவதை அறிவிக்ககூட முடியாத நிலையில் நான் நின்றேன். எனக்கு அழுகை அழுகையாக வந்தது. அழ வில்லை. "குமார்! நான் என்ன தவறு செய்தபோதும் என்னை மன்னித்துக் கொள். தயவு செய்து நாம் இருவரும் இனி நண்பர்களாக இருப்போம். என்னை இனி நீ அறுத்துக் கொண்டால் என்னுல் பொறுத்துக்கொள்ள முடியாது குமார்." எவ்வளவோ விம்மலைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றும் விழியோரத்தில் சில நீர் முத்துக்கள்! தலையைத் திருப்பிக் கொண்டு அவற்றைத் துடைத்தெறித்தேன். அந்த விளுடியில் எனது மானம், உறுதி, எல்லாம் தூள் தூளாக நொறுங்கிப் போனதாக இன்று உணர்கிறேன். இப்படிப்பட்ட ஒருவனுக்காக நான் ஏன் காலில் விழாதக் குறையாக நிற்க வேண்டும் என்று நான் நினைத்திருக்கிறேன். இருப்பினும் ஒரு ஆண் கேவலம் ஒரு பெண்ணின் அன்பிற்காக இதைவிடத் தாழ்வான செயல்களை செய்திருப்பதாகக் காவியங்கள் கூறும்போது ஒரு ஆண் தூய நட்பிற்காக மற்ருெரு ஆணிடம் தாழ்ந்து போவது தவறில்லை என்ற உறுதியான எண்ணம் எனக்குத் தென்பூட்டியது.

அதற்குப் பிறகு நானும் அவனும் நண்பர்களாக சில நாட்கள் பழகினேம். அவனது சுய நலங்களுக்கு எவ்வளவு வளைந்து கொடுக்க முடியுமோ, அவ்வளவு நான் வளைந்து கொடுத்தேன். அவனிடம் பேசுவதில், அவனும் நானும் பழகுவதில், எனக்கு நட்பு என்ற பொருளின் முழு திருப்தி கிடைத்து விட்டதுபோல ஒரு அமைதி ஏற்பட வேண்டும் என்ற எல்லை நோக்கி நான் அவனுடன் உள்ளம் கலக்கத் துடியாய் துடித்தேன். இருப்பினும் நடு நடுவே மிகவும் அளவு மீறிய விதத்தில் அவனது சுய நல செயல்கள் விளங்கும்போது, நான் மிக அமைதியாக, "குமார் சில சமயங்களில் நீயும் என்னைப்போல விட்டுக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். ஒரு முறையாவது ஏதாவது ஒன்றில் சுய நலமின்றி விட்டுக் கொடுத்துத்தான் பாரேன். ஒன்று குமார்! நீ. நான் உனக்கு அடிக்கடி கூறுவேனே, 'சுயநலக் குமார்' என்று அந்தக் குமார் மாறி பிறருக்கும் உன்னைப்போல ஆவல்கள் இருக்கும் என்று உணர்ந்து, புரிந்து கொண்டு நான் எப்படி உனது நட்பிற்காக இவ்வளவு தூரம் எதையும் செய்யக் காத்திருக்கிறேனே, அம்மா திரி நீயும் மாறி விட்டால், இறக்கும் வரை எது நேர்ந்தாலும் உனது வாழ்க்கைப் பாதையின் இறுதிவரை உன்னுடன் இன்பங்களையும், துன்பங்களையும் சுமந்து வரும் நண்பனுகத்தொடர்வேன்" என்று உணர்ச்சி கலந்து கூறுவேன். எப்படியாவது ஒரு நாள் அவன் இதயம் நிறைந்த தூய நண்பனுக மாற மாட்டாஞ என்பதற்காக இப்படியெல்லாம் அவனிடம் அடிக்கடி கூறி வருவேன். ஒரு ஆண்டு காலத்திற்குப் பிறகு அவன் ஓரளவு என்னிடம், கொஞ்சம் நன்ருகப் பழக ஆரம்பித்தான்.

இந்நிலையில் தான் ஒரு எதிர்பாராத நிகழ்ச்சி நடைபெற்று விட்டது. ஒரு நாள் இரவு என்னுடைய வீட்டிற்கு வந்தான். "சுந்தர் மிக அவசரமாக ஒரு நூறு ரூபாய் தேவைப்படுகிறது. எப்படியாவது நீ பெற்றுத் தர வேண்டும்" என்று கேட்டான். "இந் நேரத்தில் நான் எப்படித் தர முடியும் குமார். என் தந்தை கூட தூங்கச் சென்று விட்டார். நாளைக் காலை வா பார்க்கலாம். சரி அப்

www.thamizham.net - Free E Books No TM 14710

படி என்ன திடீர் அவசரம் சொல்லேன்" என்றேன். அவன் பதில் பேசவில்லை, சென்று விட்டான்.

மறுநாள் விடியற் காலை வீட்டிற்கு வெளியே ஒரே இரைச்சலாக இருந்தது. பக்கத்து வீட்டு மனிதர் நெஞ்சில் கத்திக் குத்துடன் பெரிய மருத்து மனைக்கு எடுத்துச் செல்லும் வண்டியில் தள்ளப் பட்டுக்கொண்டிருந்தார். எங்கும் ஒரே கூச்சலும், குழப்பமுமாக இருந்தது. ஒரு இன்ஸ்பெக்டர் அங்கு கூட்டத்தை விளக்கிக் கொண்டு எங்கள் வீட்டருகே வந்து கொண்டிருந்தார். அவரிடம் நடந்த நிகழ்ச்சிபற்றிக் கேட்டேன். அவர் கூறிய நிகழ்ச்சி என்னை மெய்சிலிர்க்க வைத்தது.



நேற்று இரவு யாரோ ஒரு மனிதன் என் வீட்டுக்குள் உள்ளே குதிக்க முயன்றிருக்கிறான். அதற்குள் சத்தம் கேட்ட பக்கத்து வீட்டு மனிதர் அவனைப் பிடிக்க முயன்றிருக்கிறார். ஆனால் திருடனோ அவரை மார்பில் குத்திவிட்டு ஓடியிருக்கிறான்.

ஆனால் தெரு முனை தாண்டுவதற்குள் அவன் பிடிபட்டு போலீ

www.thamizham.net - Free E Books No TM 14710

## பிணங்களால் மெத்தைகள்

"வெட்டி எடுக்கப்பட்ட பிணங்களின் கருந்தலைகளை செங்கல்லாக வைத்து, கொழுப்பை வைத்து சேருக்கி கட்டப்பட்டுள்ளன, அந்தக் கோவிலின் சுவர்கள். உள்ளே எலும்புக் குவியல்; அதன்மீது ஒரு கட்டில். குடல்களால் பின்னப்பட்டு, செங்குருதியில் தேய்க்கப்பெற்று சிவப்பாக இருக்கிறது! அதன்மீது மெத்தைகள் பிணங்களாலாகிய மெத்தைகள் ஒன்றன்மேல் ஒன்ருக அடுக்கப்பட்டுள்ளன. வெண்ணிறக் கொழுப்பாலாகிய சமுக்காளம் விரிக்கப்பட்டிருக்கிறது. அதன்மீது கம்பீரமாக காளி வீற்றிருக்கிருள்"

—கலிங்கத்துப் பரணியில்
ஒரு காட்சி

சில் ஒப்படைக்கப்பட்டு விட்டான். நான் காவல் நிலையத்திற்குச் சென்று குற்றவாளியை சந்திக்க விரும்புவதாய்க் கூறினேன். நான் சந்தித்த குற்றவாளி என் கண்களை நம்ப மறுக்க வைத்து விட்டான்! அவன் என் தூய நண்பனுக நினைத்து வந்த குமார்! "குமார்! இது என்ன கொடுமை" என்று அலறினேன். அவன் என்னைப் போல உணர்ச்சிவசப் படவில்லை. அமைதியாக "டேய் சுந்தர்! மிக அவசரமாக எனது தாய்க்கு மருந்து வாங்க வேண்டியிருந்தது நூறு ரூபாய் கேட்டேன். நீ கொடுக்க மறுத்து விட்டாய். வேறு வழி எனக்குத் தோன்றவில்லை. உன் தந்தை இன்றுதான் சம்பளம் வாங்கியிருப்பார் என்று எனக்குத் தெரியும்......அதனுல்..."

"குமார் நட்பு என்ற சொல்லுக்காக நான் உயிரையும் கொடுக்க துணிந்திருந்தேனே! கேவலம் நூறு காகித நோட்டுக்களுக்காக நீ இவ்வளவு துச்சமாக எனது நட்பை மதிப்பாயானுல் உனது பேச்சாற்றலும், நடிப்பாற்றலும் அழிவுச் சின்னங்களாகவே உன்னைப் பொறுத்தவரைப் பயன்படும். நீ எதற்காக நூறு ரூபாய் வேண்டும் என்று எனது நண்பன் என்ற நிலையில் உனது துன்பத்தை என்னிடம் பரிமாறிக் கொண்டிருந்தால்கூட, எனது தந்தையை அன்று இரவு எழுப்பி உனக்குப் பணம் பெற்றுத் தந்திருப்பேன்."

அவன் பேசவில்லை! மௌனமாக நின்ருன். நான் தொடர்ந்தேன்.

"குமார்! உன்னைப் போலத் திறனுற்றலும், பேச்சாற்றலும் உடையவர்கள் சில நூற்ருண்டுக்கொரு முறைதான் பிறப்பார்கள் என்று உனக்கு அடிக்கடி சொல்வேனே நினைவிருக்கிறதா? அத்தகைய உனது அரிய திறமைகள் எவ்வளவு தவருன வழியில் செலவழிக்கப்பட்டு, எவ்வளவு பெரிய சமுதாய நஷ்டத்தை ஏற்படுத்துகின்றன பார்த்தாயா!" அவன் எவ்வித உணர்வுகளுமின்றி கவனிப்பதாக உணர்ந்தேன். எனவே விடை பெறுமுன்.

"குமார் ஆனுல் ஒன்று மட்டும் சொல்கிறேன். நீ உலகிலேயே மிகக் கொடிய மனிதனுக இருந்த போதிலும், எனது மனதளவில் நண்பன் என்ற உயர்ந்த பீடத்தில் நீ அமர்த்தப்பட்ட பிறகு நான் இறக்கும் வரை என்னுல் என்றுமே மறக்க முடியாத நண்பன் நீ".

அதற்கு மறு நாள் பக்கத்து வீட்டு மனிதர் இறந்து விட்டதாக அறிந்தேன். மீண்டும் குமாரைச் சந்திக்கலாமென்று அங்கு சென்றேன். அவன் வேறு இடத்திற்கு

www.thamizham.net - Free E Books No TM 14710

மாற்றப்பட்டதாக அறிந்தேன். அதன் பிறகு அவனை நான் சந்திக்கவே இல்லை. பிறகு அவன் எங்கோ கைதியாக இருப்பதாக யாரோ சொன்னதாக ஒரு நினைவு!

ஓடி மறைந்துவிட்ட கால வெள்ளத்தில், எத்தனையோ ஆண்டுகள் மறைந்து மூழ்கி விட்டன. என்றாவது திடீரென்று அவனைப்பற்றி நினைத்துக்கொண்டு கண்ணீர் விடுவேன்.

மீண்டும் இத்தகைய ஒரு உல்லாசப் பயண இடத்தில், துன்பமயமான இறந்தகால நினைவை எழுப்பும் நபரை சந்திப்பேன் என்று கனவில் கூட நினைத்திருக்கமாட்டேன். இதோ குமார் தலை விரித்த வண்ணம் பைத்தியமாக வந்து கொண்டிருக்கிறான் எங்களை நோக்கி!

என்னை நோக்கி அவன் பார்வை திரும்புகிறது! மிக அருகில்நெருங்கி விட்டான்!

பத்தடி தூரம்!

எனது நாடி நரம்புகள் எல்லாம் மீண்டும் நேருக்குநேர் சந்திக்கப் போகும் அவனது பார்வையை எதிர்நோக்கி ஒரு கணம் மரண அமைதியில் ஆழ்ந்தன! என் அருகே வந்தான். அவனது தலை என்னை நோக்கி உயர்ந்தது. என்னைப் புரிந்துகொண்ட ஒரு பார்வை.

"சுந்தர்! சுந்தர்! நட்பு நட்பு! நட்பிற்காக" அவன் பிறகு என்னைப் பார்க்கவில்லை. உணர்ச்சியற்ற கற்சிலையெனத் திரும்பிப் பாராமல் நடந்துகொண்டே இருந்தான்!

[முற்றும்]

## வலிக்கிறதா? கற்பனையாக இருக்கலாம்!

பல சமயங்களில் வலிகள் ஏற்படுவது கற்பனை உணர்ச்சி தவிர வேறல்ல என்று மனோதத்துவ நிபுணர்கள் கருதுகிறார்கள். இதனை நிரூபிக்க அண்மையில் ஒரு சுவையான சோதனை நிகழ்த்தப்பட்டது. அடிபட்டு வலியால் துடித்துக் கொண்டிருந்த சில நோயாளிகளுக்கு, சக்தி மிக்க வலி நிவாரண ஊசி போடுகிறோம் என்று கூறி மருத்துவர்கள் சாதாரண உப்பு நீரை செலுத்தினர். உடனே பாதிக்கு மேற்பட்ட நோயாளிகள் வலியிலிருந்து ஓரளவு விடுதலை கிடைத்ததாக மகிழ்ச்சியுடன் கூறினர்.

இந்தச் சோதனையை மாற்றியும் செய்து பார்த்தனர். ஒரு நோயாளிக் குழுவினருக்கு மருத்துவர்கள் "மார்பியம்" ஊசி போட்டு விட்டு, 'அவ்வளவு பயனில்லாத ஒரு ஊசியை' போட்டிருக்கிறோம் என்று அறிவித்தனர். என்ன விந்தை! 20%க்கு மேற்பட்ட நோயாளிகள், வலி குறையவே இல்லையென்றும், சிலர் வலி அதிகமாகிவிட்டதென்றும் குறை கூறினராம்.

ஆதாரம்:

தி சண்டே ஸ்டான்டர்ட்.

www.thamizham.net - Free E Books No TM 14710